### முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் போற்றி – அவர் வழியில்

# மக்கள் பணி - கழகப் பணி தொடர உறுதி ஏற்போம்!



## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூன் 5 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கலைஞர் வழியில் மக்கள் பணி - கழகப் பணியாற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.**

அது வருமாறு:

தந்தை பெரியாரின் வழியில் மானமிகு சுயமரியாதை போராளியாய், பேரறிஞர் அண்ணா வழியில் மொழியுரிமை, மாநில உரிமைகள் காத்த தமிழினத் தலைவராய் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் போற்றுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் கழகத்தலைவர் அவர்கள் வழியில் மக்கள் பணி, கழகப் பணி தொடர உறுதியேற்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### எஸ்.அன்புச்செழியன் தலைமையில் - கோவை மாநகர் மாவட்ட

# தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## மூத்த வழக்கறிஞர்கள் கே.எம்.தண்டபாணி - பி.ஆர்.அருள்மொழி பங்கேற்பு!

*கோவை ஜூன்: 5*

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் எஸ். அன்புச்செழியன் தலைமையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்பு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்தும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். அன்புச்செழியன் தலைமையில் தி.மு.க.சட்டத்துறை மாநில இணைச் செயலாளர்கள் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மூத்த வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, ஆகியோர் முன்னிலையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்பு வழங்கியும் 03.06.2026 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர் அணி தலைவர் கனகராஜ், மூத்த வழக்கறிஞர் கணேஷ்குமார், துணைத் தலைவர் மணிவேல், துணை அமைப்பாளர்கள் சலாவுதீன், விக்ரம், எலிசபெத்ராணி, மதிவாணன், ஜி.ராஜன், ரத்தினகுமார், மற்றும் முன்னாள் அமைப்பாளர்கள் ஜி.டி.ராஜேந்திரன், மயில்வாகனன், வழக்கறிஞர்கள் ராஜப்பன்,

எஸ்.ரவிச்சந்திரன், முனீர், சலீம், அன்வர்தீன், ஜியா உல் ஹக், அபுதாஹிர், ரவீந்திரன்,

அரசு வழக்குரைஞர்கள் வி.ரவிச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, முத்துவிஜயன், நிஜலிங்கப்பா, ராஜமாணிக்கம், பி.விஜயகுமார், மற்றும் கர்ணன், ஆர்.முத்துகுமார், பி.முத்துகுமார், எம்.தர்மராஜ், பரமேஸ்வரன், குணசேகரன், தமிழ்செல்வன், மனோகரன், சுந்தர்ராஜன், சௌந்தர்ராஜன், தீபக்மது, மணிமாறன், ஈஸ்வரன்,

வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இளங்கோ, வெற்றி, ராஜேஷ்குமார், கோகிலவாணி, மற்றும் அமுல்ராஜ், முருகானந்தம், கே. மோகன், பாண்டிக்குமார், ஸ்டேன்லி ராஜ்குமார், தமிழ்செல்வி, மணிமேகலை, ஜீவா, லலிதா, மகேஸ்வரி, திவ்யபாரதி, தோழமை கட்சிகளின் வழக்கறிஞர்கள் ஜோதி,மாசே துங்க், கோபால் சங்கர், வெண்மணி, சீலா ராஜன், சக்திவேல் உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள்,மகளிர் வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள் என 300க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் – திருச்செங்கோடு, பரமத்தி வேலூரில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி மாலை அணிவித்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

*நாமக்கல் ஜூன் 5 :*

முத்தமிழறி ஞர் கலைஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திமுக சார்பில் விழா கொண்டாடப்பட்டு, அவரது திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் மற்றும் கட்சித் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்செங்கோட்டில் அண்ணா சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நகர கழக செயலாளரும் நகர மன்ற துணைத் தலைவர் மாந தா.கார்த்திகேயன், நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து அண்ணா சிலையிலிருந்து பேரணியாக வந்த திமுகவினர், திருச்செங்கோடு நகராட்சி அலுவலகம் முன்பு அமைக்கப்பட்டிருந்த கலைஞரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொதுமக்கள் மற்றும் கட்சித் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் பரமத்தி வேலூரில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவிற்கு பேரூர் கழக செயலாளர் முருகன் தலைமை வகித்தார். மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் கண்ணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவலடி ராஜா, பூக்கடை சுந்தர், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூர் கழக துணைச் செயலாளர் செந்தில்நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி

காமராஜர் சிலை அருகே அலங்கரிக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் பரமத்திவேலூர் பேட்டையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் படிப்பகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன், ஜேடர்பாளையம், வடகரை ஆத்தூர் மற்றும் கபிலர்மலை பகுதிகளிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டதுடன், பொதுமக்களுக்கு இனிப்புகள் நலத்திட்ட உதவிகள் வழங்கி னார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் தலைமையில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கும், ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நான் வளர்த்த - என்னை வளர்த்த ‘அன்பகம்’ - புதுப்பொலிவுடன்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!





**சென்னை, ஜூன்.5–**

**நான் வளர்த்த, என்னை வளர்த்த அன்பகம் புதுப் பொலிவுடன் திகழ்கிறது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்த நாளை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் தலைமையகமான அன்பகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 75 அடி உயர கம்பத்தில் கழகத்தின் இருவண்ணக் கொடியை கழகத் தலைவர் – முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்து தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மார்பளவுச் சிலைகளைத் திறந்துவைத்து, அன்பகத்தின் முதல் தளத்தில் புதுப்பிக்கப்பட்ட அலுவலகத்தையும் திறந்துவைத்து, இளைஞர் அணி மேற் கொண்டுவரும் ஆக்கப்பூர்வமான பணிகளைப் பார்வையிட்டார். ஏற்கெனவே புதுப்பிக்கப்பட்ட இரண்டாவது தளத்திற்கும் சென்று, அங்கு நடை பெறும் பணிகளையும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.**

**இதைத் தொடர்ந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவு வருமாறு:**

**நான் வளர்ந்த – என்னை வளர்த்த அன்பகம் புதுப்பொலிவுடன்**

**@dmk_youthwing புதுவேகத்துடன் – புதிய இளைஞர்களைக் கொள்கையோடு வளர்த்து, வெற்றியை நமதாக்கட்டும்!**

**இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

### சங்க பொதுச் செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில்

# அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

## 1000 பேருக்கு உணவு! கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கினர்!

*சென்னை, ஜூன்.5-*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் அதன் பொதுச்செயலாளர் ச.உ.பிரபாகர் தலைமையில் 3.6.2026 அன்று காலை சிறப்பாக கொடியேற்றி கொண்டாடப்பட்டது.



இவ்விழாவில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 1000 நபர்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கப்பட்டது.

அரசு ஊழியர்கள் வாழ்வில் ஒளியேற்றிய பல எண்ணற்ற நலத்திட்டங்களை வழங்கிய ‘முத்தமிழறிஞர் கலைஞர்’ அவர்களின் நினைவினை என்றும் நெஞ்சில் சுமக்கும் அரசு ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரம் அவர்களின் பிறந்த தின விழாவில் கீழ்க்கண்ட அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொருளாளர் ஆ.ஜெய்சங்கர், இணைச் செயலாளர் என்.நாராயணன், துணைப் பொருளாளர் ஆர்.நாகராஜன், சட்ட ஆலோசகர் எஸ்.பி.எஸ்.புத்தன், அலுவலக செயலாளர் பி.சுகுமார், சங்க ஆலோசகர் ஹரி, துணைத் தலைவர் ஏ.ரவிச்சந்திரன், என்.பெருமாள், பி.எஸ்.வெங்கடேசன், இ.மஞ்சுளா, என். ஸ்டான்லி, பி.சீனிவாசன், வி.ராணி, வி.லோகநாதன், ஜெ.துரைபாபு, ஜெ.பாண்டியன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், டி.பாலகிருஷ்ணன், பி.புனிதன், டி.ரஞ்சித் குமார், எம். சங்கர், கே.ஜெயராமன், டி.பி.லதா, ஜெ.ரிச்சர்ட் சாமுவேல், சமீர், எஸ்.காளிதாசன், பி.நடராஜன், எஸ். வெங்கடேசன், ஐ.ஷீலா, என்.ரவிச்சந்திரன், எல். லீலாவதி, எச்.எம்.முகம்மது அப்துல் காதர், ஆர்.கமலநாதன், இ.ராஜன், டி.சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.வழக்கறிஞர் அணி சார்பில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.அன்புச் செழியன் தலைமையில் தி.மு.க.சட்டத்துறை மாநில இணைச் செயலாளர்கள் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, மூத்த வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, ஆகியோர் முன்னிலையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி,பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்பு வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.